# பதினோராம் வகுப்பு பொருளியல்
# முழு ஆண்டு தேர்வு-2023
# வினா விடைகள்

## பகுதி அ



**I. பொருத்தமான விடையை தெரிவு செய்யவும். 20 X 1 = 20.**

| வினா எண் | விடைகள் | வினா எண் | விடைகள் |
|---|---|---|---|
| | **A TYPE** | | |
| 1 | ஈ). தொகுத்தாய்வு முறை | 11 | அ. **இறுதிநிலை** |
| 2 | ஆ. **சென்னை** | 12 | ஈ). ஜியோவானி செவா |
| 3 | இ. **அ மற்றும் ஆ** | 13 | ஈ). இவை அனைத்தும் |
| 4 | ஈ) **கூலி** | 14 | இ 400 |
| 5 | ஈ) நேர்மறை | 15 | ஈ). **ஆடம் ஸ்மித்** |
| 6 | ஆ "சிறு பிளவு ஆண்டு" | 16 | இ சர் மால்கம் டார்லிங் |
| 7 | இ. 50 | 17 | ஈ). **பொது மற்றும் தனியார் துறைகள் சேர்ந்து செயல்படுவது** |
| 8 | ஈ) F.B.ஹாலே | 18 | ஆ மாறா விகித விளைவு விதி |
| 9 | ஆ. **M.S. சுவாமிநாதன்** | 19 | அ. **இரட்டைத் தன்மை** |
| 10 | ஆ. **MC = MR** | 20 | அ. தூத்துக்குடி |
| | **B TYPE** | | |
| 1 | ஈ). ஜியோவானி செவா | 11 | இ சர் மால்கம் டார்லிங் |
| 2 | அ. **இரட்டைத் தன்மை** | 12 | ஆ. **சென்னை** |
| 3 | அ. **இறுதிநிலை** | 13 | ஈ) நேர்மறை |
| 4 | அ. தூத்துக்குடி | 14 | ஈ). **பொது மற்றும் தனியார் துறைகள் சேர்ந்து செயல்படுவது** |
| 5 | ஈ) **கூலி** | 15 | இ. 50 |
| 6 | இ. **அ மற்றும் ஆ** | 16 | ஈ). **ஆடம் ஸ்மித்** |
| 7 | ஆ. **M.S. சுவாமிநாதன்** | 17 | ஆ மாறா விகித விளைவு விதி |
| 8 | ஆ "சிறு பிளவு ஆண்டு" | 18 | ஈ). இவை அனைத்தும் |
| 9 | ஈ) F.B.ஹாலே | 19 | ஈ). தொகுத்தாய்வு முறை |
| 10 | இ 400 | 20 | ஆ. **MC = MR** |

MGPCHANDRAN
www.Padasalai.Net

## பகுதி ஆ


**II. எவையேனும் 7 வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை அளிக்கவும் வினா எண் 30 கட்டாயம் விடை அளிக்கவும் .** 7 x 2 = 14

| வினா எண் | விடைகள் | மதிப் பெண்கள் |
|---|---|---|
| 21 | **கிஃபன் பொருள்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?**<br>ஏழை எளிய மக்கள், நுகரும் கீழ் நிலைப் பண்டங்கள் கிஃபன் பொருள்கள் எனப்படும்.( கம்பு கேழ்வரகு)<br><br>ஏழை எளிய மக்கள், நுகரும் கீழ் நிலைப் பண்டங்களின் விலை அதிகரித்தால், அதனுடைய தேவை அளவும் அதிகரிக்கும் விலை குறைந்தால் தேவை அளவும் குறையும். | 2 |
| 22 | **அளிப்புக் கோடு மேல்நோக்கிச் செல்வதன் காரணம் என்ன?**<br>விலைக்கும் அளிப்பிற்கும் நேரடித்தொடர்பு உள்ளது .அதாவது ஒரு பண்டத்தின் விலை உயர்வால் அளிப்பு அதிகரிக்கும் , விலை குறைந்தால்<br>அளிப்பும் குறையும்.ஆகவே அளிப்புக்கோடு மேல்நோக்கிச் செல்லும். | 2 |
| 23 | **மூழ்கும் செலவுகள் என்றால் என்ன?**<br>மீட்டு எடுக்க முடியாத கடந்தகாலச் செலவுகள் அமிழ்த்தப்பட்ட செலவு ஆகும். ஒரு முறை முதலீடு செய்யப்பட்டது மூழ்கியதாக கருதப்பட்டால் அவை அமிழ்த்தப்பட்ட செலவுகள் எனப்படும் | 2 |
| 24 | **கீழ் கண்ட நிறுவனத்தின் தேவைக்கோடு வரைக**<br>**அ. நிறைவுப்போட்டி** **ஆ.முற்றுறிமை**<br>  | 2 |
| 25 | **முன்னேறிய பொருளாதாரத்தின் இரண்டு இயல்புகளைகூறுக.**<br>1. உயர்ந்த நாட்டு வருமான வளர்ச்சி 2. உயர்ந்த தனிநபர் வருமானம் 3. உயர்ந்த வாழ்கைத் தரம்<br>4. தொழில்துறையின் ஆதிக்கம். ( ஏதேனும் இரண்டு ) | 2 |
| 26 | **சுதந்திரம் அடைவதற்கு முன் இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வகையான நில உடைமை முறைகள் யாவை ?**<br>சுதந்திரத்திற்கு முன் மூன்று விதமான நில உடைமை முறைகள் இருந்தன. அவை<br>1. ஜமீன்தாரி முறை 2. மஹல்வாரி முறை மற்றும் 3. இரயத்துவாரி முறைஆகும். | 2 |
| 27 | **மத்திய மற்றும் மாநில அரசுகள் அறுவடைக்குப்பின் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் உட்கூறுகளைக் கூறுக.**<br>பெரிய உணவுப்பூங்கா, ஒருங்கிணைந்த குளிர் இணைப்பு, மதிப்புக் கூட்டி பாதுகாக்கும் கட்டமைப்பு, மற்றும் நவீன இறைச்சி வதைக் கூடங்கள். | 2 |

| | | |
|---|---|---|
| 28 | **தமிழ்நாட்டின் அணுமின் நிலையங்கள் எவை?**<br>1. கல்பாக்கம், 2. கூடங்குளம் | 2 |
| 29 | MS Word ன் முக்கிய அம்சங்கள்யாவை?<br>1. ஆவனத்தை உருவாக்க நகலெடுக்க, திருத்தியமைக்க வடிவமைக்க முடியும்.<br>2. பிழைத்திருத்தம் செய்யும் வசதிஉள்ளது<br>3. பல ஆவனங்களை ஒன்றாக இணைக்க முடியும். | 2 |
| 30 | **தேசிய ஊரக நல அமைப்பு பற்றி எழுதுக.**<br>தேசிய ஊரக நல அமைப்பு12 ஏப்ரல்2005 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. நலிவடைந்த ஊரக மக்களுக்காக ஆரோக்கியமான வசதிகளை ஏற்படுத்தி தருவது. | 2 |

## பகுதி –இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடை அளிக்கவும் .**
**வினா எண் 40 க்கு கட்டாயம் விடையளிக்கவும் .** **7 x 3 = 21**

| வினா எண் | விடைகள் | மதிப் பெண் கள் |
|---|---|---|
| 31 | **பொருளியலைப் பற்றிய பற்றாக்குறை இலக்கணத்தை விளக்குக. மேலும் அதனை மதிப்பீடு செய்க.**<br>**இலக்கணம்**<br>**இலயனல் ராபிசின் இலக்கணம்** "விருப்பங்களோடும் கிடைப்பருமை உள்ள சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றிய அறிவியலே பொருளியல்" ஆகும் எனக் குறிப்பிடுகிறார்.<br>**சிறப்பியல்புகள்**<br>1.மனித விருப்பங்கள் எல்லையற்றது. 2. வளங்கள் பற்றாக்குறையானவை.<br>3. பற்றாக்குறை தெரிவு செய்தலுக்கு வழி செய்கிறது.<br>குறைபாடுகள்<br>1. ஒழுக்க நெறி கருத்துக்களை புறக்கணித்து விட்டது.<br>2. வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் சார்ந்த கோட்பாடுகளை உள்ளடக்கவில்லை.<br>3. மனித தத்துவம் காணப்படவில்லை | 3 |
| 32 | **தேவை விரிவு மற்றும் தேவைச் சுருக்கத்தை வேறுபடுத்துக.**<br><br><br>விலை மாற்றத்தால் தேவை மாறினால் அது தேவை விரிவு மற்றும் தேவைச் சுருக்கம் எனப்படும் இது ஒரே தேவை வளைகோட்டில் காட்டப்பட்டுள்ளது.<br>வரைபடத்தில் விலை $OP_1$ க்கு அதிகரிக்கும்போது தேவைகோட்டில் A புள்ளி B புள்ளிக்கு நகர்ந்து செல்லுதல் தேவைச்சுருக்கம் எனப்படும் மாறாக | 3 |

www.Padasalai.Net VGP CHANDRAN

| | | |
|---|---|---|
| | விலை $OP_2$ க்கு குறையும் போது தேவைகோட்டில் A புள்ளி C புள்ளிக்கு நகர்ந்து செல்லுதல் தேவை விரிவு எனப்படும் | |
| 33 | **அளிப்பு நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?**<br>1. பொருட்களின் தன்மை. 2. உற்பத்திச் செலவு.<br>3. தொழில்நுட்ப நிலை 4. கால அளவு. | 3 |
| 34 | **வாய்ப்புச் செலவு.என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.**<br>வாய்ப்புச் செலவு. என்பது அடுத்த சிறந்த மாறுபட்ட செலவைக் குறிக்கும்.<br>எ.கா. விவசாயி தன் நிலத்தில் கரும்பு அல்லது நெல் விளைவிக்க முடியும். அவ் விவசாயி நெல் விளைவித்தால், நெல்லின் வாய்ப்புச் செலவு என்பது விட்டுத்தந்த கரும்பின் உற்பத்தி அளவே ஆகும். | 3 |
| 35 | **நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்யாவை?**<br>**நிறுவனம்**<br>உற்பத்தி செய்து விற்பனை செய்யும் ஒரு அமைப்பு நிறுவனம் என அழைக்கப்படுகிறது. எ.கா. சங்கர் சிமெண்ட்<br>**தொழில்**<br>உற்பத்தி செய்யக்கூடிய பல நிறுவனங்களின் தொகுப்பே தொழில் ஆகும். எ.கா. சிமெண்ட் தொழில் | 3 |
| 36 | **பணத் தேவைக்கான நோக்கங்கள் யாவை?**<br>1.பரிமாற்ற நோக்கம் 2. முன்னெச்சரிக்கை நோக்கம். 3. ஊக வாணிப நோக்கம். | 3 |
| 37 | **கிராமசர்வோதயம் – சிறுகுறிப்பு வரைக.**<br>"உண்மையான இந்தியா வாழ்வது நகரங்களிலோ புறநகரங்களிலோ இல்லை கிராமங்களில் தான்" என்று சொன்ன காந்தியடிகள் கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும் என்றார். | 3 |
| 38 | **GST என்றால் என்ன? அதன் நன்மைகளை எழுது**<br>GST என்பது நுகர்வோர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படும் வரியாகும்.<br>**நன்மைகள்**<br>1. அடுக்குவரி விளைவுகளை நீக்கியது.<br>2. ஒருமுனை வரியாக உள்ளது<br>3. இணைய வழி வசதி மூலம் எளிமைப் படுத்தப்பட்டுள்ளது<br>4. மின்னணு வணிகம் வரையறுக்கப்பட்டுள்ளது<br>5. தளவாடங்களின் திறன் அதிகப்படுத்தப்பட்டுள்ளது<br>**( ஏதேனும் மூன்று நன்மைகள் )** | 3 |
| 39 | **MUDRA வங்கியின் நோக்கங்களை பட்டியலிடுக.**<br>1. குறுங்கடன் வாங்குபவரையும், பெறுபவரையும் ஒழுங்குபடுத்துதல்..<br>2. கடன் வழங்கும் சிறு நிதி நிறுவனங்களுக்கு, மேலும் நிதி மற்றும் கடன் வசதியை ஏற்படுத்தி தருதல்.<br>3. அனைத்து சிறு நிதி வழங்கும் நிறுவனங்களை பதிவு செய்தல்<br>4. கடன் உத்திரவாத திட்டம் ஆரம்பித்தல்.<br>**( ஏதேனும் மூன்று நோக்கங்கள் )** | 3 |

VGP CHANDRAN


| | | |
|---|---|---|
| 40 | **DMP முறை குறித்து விளக்குக.**<br>1.பணிக்கான படிப்பு என்ற ஆய்விற்காக பீட்டர் டயமண்ட், டேல் மார்டின்சன், மற்றும் கிறிஸ்டோபர் பிசாரிட்ஸ், ஆகியோர் 2010 ஆம் ஆண்டிற்கான பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை பகிர்ந்து கொண்டனர்.<br>2. இவர்கள் உருவாக்கிய முறைக்கு DMP முறை எனப்படும்.<br>3. பொருளாதார கொள்கைகள் மற்றும் ஒழுங்கு முறைகள் எப்படி வேலையின்மையை வேலைக்கான காலியிடங்கள் மற்றும் கூலி ஆகியவற்றை பாதிக்கிறது என அறிந்து கொள்ள இம்முறை உதவுகிறது | 3 |

**பகுதி -ஈ**

**IV. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும். 7 x 5 = 35.**

| வினா எண் | விடைகள் | மதிப் பெண்கள் |
|---|---|---|
| 41அ | **பொருளாதாராத்தின் தன்மைகளை மற்றும் எல்லைகளை விவாதிக்கவும்?**<br>**பொருளியலின் இயல்புகள்**<br>பொருளியலின் இயல்பினை குறிப்பிட்ட சில அறிஞர்களின் பல்வேறு வரையறைகளைப் படிப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம்<br>1. ஆடம்சுமித்தின் செல்வ இலக்கணம்<br>2. ஆல்பிரட் மார்ஷலின் நல இலக்கணம்<br>3. ராபின்சனின் பற்றாக்குறை இலக்கணம்<br>4. பால் சாமுவேல்சனின் நவீன பொருளாதார இலக்கணம்<br>**பொருளியலின் எல்லை**<br>**பொருளியல் ஓர் அறிவியல்:-** அறிவியல் என்பது ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட ஓர் அறிவுத் தொகுதி ஆகும்.<br>**பொருளியல் ஒரு கலை :-** கலையியல் என்பது ஒருகுறிக்கோளை அடைவதற்கான வழிமுறைகளைப்பற்றி விளக்குவதாகும்.<br>**இயல்புரை பொருளியல் :-** இது உள்ளதை உள்ளவாறு காணும் ஒழுங்கு படுத்தப்பட்ட அறிவுத் தொகுதி ஆகும்.<br>**நெறியுரை பொருளியல் :-** இது நீதி நெறி ஒழுக்க நெறி கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. | 5 |
| 41 ஆ | **தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக**<br>1. தமிழ்நாடு மிகச் சிறந்த மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதி கொண்டது.<br>2. நாட்டிலுள்ள நகரங்கள் கிராமப்புறங்கள் மற்றும் வேளாண் அங்காடிப் பகுதிகளை இணைக்க கூடியத் தரமான சாலைப் போக்குவரத்தைக் கொண்டுள்ளது<br>3. மாநிலத்தில் 28 தேசிய நெடுஞ்சாலைகள் 5036 கி.மீ. தொலைவினை இணைக்கின்றன<br>4. தங்க நாற்கரத் திட்டம் முனையமாக நமது மாநிலம் உள்ளது | 5 |



| | | |
|---|---|---|
| | 5. சாலை போக்குவரத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.<br>6. தமிழ்நாட்டில் உள்ள இருப்புப் பாதையின் மொத்த நீளம் 6693 கி.மீ. ஆகும்.<br>7. சென்னையில் மெட்ரோ இரயில் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br>8. பெரிய சர்வதேச விமான நிலையமாக சென்னை சிறந்து விளங்குகிறது.<br>9, சென்னை எண்ணூர், தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் ஆகியவை தமிழ்நாட்டின் மிகப்பெரிய துறைமுகங்களாகும்<br>10. சென்னை துறைமுகம் கன்டெயினர்களைக் கையாளும் திறன் கொண்ட இந்தியாவின் இரண்டாவது முக்கிய செயற்கைத் துறைமுகமாகும். | |
| **42அ** | ***ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை: விவாதி.***<br>**1. வேளாண்மையை சார்ந்திருத்தல்:** ஊரக பொருளாதாரம் இயற்கையையும், வேளாண் நடவடிக்கைகளையும் சார்ந்துள்ளது.<br>**2. ஊரக மக்களின் வாழ்க்கை முறை**: பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத்தரம் ஏழ்மைநிலையிலும், பரிதாபகரமாகவும் உள்ளது.<br>**3. மக்கள் தொகை அடர்த்தி**: மக்கள் தொகை அடர்த்தி மிகவும் குறைவாகவும், வீடுகள் கிராமம் முழுக்க பரவிக் காணப்படுகின்றன<br>**4. வேலைவாய்ப்பு:** பருவகால வேலையின்மை மற்றும் குறைவேலையுடைமை ஆகியன கிராமப்புறங்களில் நிலவுகின்றன.<br>**5. வறுமை**:- 2011- 12 ன் மதிப்பீட்டின் படி ஊரகப்பகுதிகளில் சுமார் 22 கோடி மக்கள் ஏழையாகவும், வறுமைக் கோட்டிற்கு கீழும் வசிக்கின்றனர்.<br>**6. கடன் சுமைகள்:** "ஓர் இந்திய உழவன் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து, கடனிலேயே இறந்து கடனையே விட்டுச் செல்கின்றான்". எனவே ,கிராமமக்கள் கடனில் மூழ்கி தற்கொலைக்கு ஆளாகின்றனர்.<br>**7. ஏற்றத்தாழ்வு:** ஊரக பகுதிகளில் சமூக, மற்றும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகிறது.<br><br>**( ஏதேனும் ஐந்து விளக்கத்துடன் )** | **5** |


| | | |
|---|---|---|
| 42 ஆ | **தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரி.**<br>**தேவை:-**தேவை என்பது ஒரு பொருளை வாங்குவதற்கான விருப்பம் ,வாங்கும்சக்தி வாங்கிடவேண்டும் என்ற முடிவையும் குறிக்கும்.<br><br><br>**தேவைவிதி:-**<br>"பெர்கூசன்"என்பவரின் கூற்றுப்படி "விலையும் தேவையும் எதிர்கணிய தொடர்பு கொண்டுள்ளன." விலை கூடினால் தேவை குறையும். விலை குறைந்தால் தேவை கூடும்.<br>**தேவை வளைகோடு:-** DD என்பது நுகர்வோரின் தேவை வளைகோடு. விலை ரூ 5,4,3,2,1என்று குறையும் பொழுது தேவையானது 1,2,3.4,5 எனஅதிகரிக்கிறது.அதாவது விலை குறையும்பொழுது தேவை கூடுகிறது.<br>**விதி விலக்குகள் :1.** கிஃபன்முரண்பாடு<br>கிஃபன் பண்டங்களின் விலை குறையும் போது குறைவாக வாங்குவர். விலை கூடும்போது அதிகம் வாங்குவர். (உ.ம்) ராகி<br>2. வெப்ளன் விளைவு<br>பணக்காரர்கள் சமூகஅந்தஸ்திற்காக விலை உயர்வாக இருந்தாலும் சில பண்டங்களை அதிகமாக வாங்குகின்றனர் (உ.ம். வைரம்). | 5 |
| 43அ | **சம அளவு உற்பத்திக் கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரி.**<br>**சம அளவு உற்பத்திக்கோடு**<br>சம அளவு உற்பத்திக்கோடு என்பது இரு உற்பத்திக் காரணிகளை பல்வேறு கலவைகளில் பயன்படுத்தி ஒரே அளவு உற்பத்தி செய்வதைக் குறிக்கும்<br>**சம அளவு உற்பத்திக்கோட்டின் இயல்புகள்**<br>1. இடமிருந்து வலமாக மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும்.<br>சம அளவு உற்பத்திக்கோடு இடமிருந்து வலமாக மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும்.<br>அதாவது எதிர்மறையாக சரிந்துள்ளது.<br>2. தோற்றுவியை நோக்கி குவிந்து காணப்படும். .<br>இறுதிநிலை தொழில்நுட்ப பதிலீட்டு விகிதத்தால் சம அளவு உற்பத்திக்கோடு தோற்றுவியை நோக்கி குவிந்து காணப்படும்.<br>3. ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது.<br>சம அளவு உற்பத்திக்கோடுகள் ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது. | 5 |
| 43 ஆ | **சிறப்பு பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும் பண்புகளையும் விளக்குக.**<br>**நோக்கங்கள்**<br>**1.** அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்தல்<br>,2. நம் நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்தல்.<br>3. உலகஏற்றுமதியில் நமது பங்கினைஅதிகரித்தல்.<br>4. கூடுதல் பொருளாதார நடவடிக்கைகளைஉருவாக்குதல்.<br>5. வேலை வாய்ப்புகளை உருவாக்குதல். 6. கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல். | 5 |



| | | |
|---|---|---|
| | **இயல்புகள்**<br>1. பாதுகாப்புடன் கூடிய நிலப்பகுதிகள். 2. தனி அமைப்பால் நிர்வகிக்கப்படுவது.<br>3. நெறி முறைப்படுத்தப்பட்ட நடைமுறைகள்.<br>4. தாராளமய பொருளாதார சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது | |
| **44அ** | **இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்பாடுகளை விவரி**<br>பொருளாதாரத் திட்டமிடுதலின் நோக்கம் பற்றாக்குறையான வளங்களை திறமையாக பயன்படுத்தி இலக்குகளை அடைவதாகும் இதுவரை இந்தியா 12 திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. தற்போது திட்டகுழுவிற்கு பதிலாக நிதிஆயோக் மூலம் திட்டமிடுதல் மேற்கொள்ளப்படுகிறது. | **5** |

| வ.எண் | திட்டகாலம் | நோக்கங்கள் |
|---|---|---|
| 1 | முதல் திட்டம் | வேளாண்மை முன்னேற்றம். |
| 2 | இரண்டாம் திட்டம் | தொழில் முன்னேற்றத்தை மேம்படுத்துவதாகும் |
| 3 | மூன்றாம் திட்டம் | அடிப்படைத் தொழில்கள் |
| 4 | . நான்காம் திட்டம் | பங்கீட்டு நிதியுடன் வளர்ச்சி மற்றும் சுயசார்பு |
| 5 | ஐந்தாம் திட்டம் | வறுமை ஒழிப்பு |
| 6 | ஆறாம் திட்டம் | வறுமை ஒழிப்பு |
| 7 | ஏழாம் திட்டம் | வேலைவாய்ப்பை உருவாக்குதல் |
| 8 | எட்டாம் திட்டம் | முழு வேலைவாய்ப்பை உருவாக்குதல் |
| 9 | ஒன்பதாம் திட்டம் | சமூக நீதி மற்றும் சமத்துவம் |
| 10 | பத்தாம் திட்டம் | வறுமை மற்றும் மக்கள் தொகையை குறைத்தல் |
| 11 | பதினொன்றாம் திட்டம் | “விரைவான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியாகும்” |
| 12 | பனிரெண்டாம் திட்டம் | விரைவான வளர்ச்சியாகும்” |

www.Padasalai.Net VGP CHANDRAN

| | | |
|---|---|---|
| 44 ஆ | **பல்வேறுபட்ட விலையில் AR மற்றும் MR கோடுகளிடையே உள்ள உறவுகளை விளக்குக?**<br>சராசரி வருவாய் :- **AR= TR/Q**<br>இறுதிநிலை வருவாய். **MR= $TR_n$-$TR_{n-1}$**<br><br>**AR** மற்றும் **MR** கோடுகளிடையே உள்ள உறவு<br><u>1. விலை மாறாதபோது :-</u> AR மற்றும் MR கோடுகள் ஒன்றிணைந்து ஒரே கோடாக இருக்கும். இது Xஅச்சுக்கு இணையாக இருக்கும்.<br><br><u>2. விலை மாறும் போது</u><br>விலை மாறும் போது விலை பேதம் காட்டப்படும். எனவே AR கோட்டிற்கு கீழே MR கோடு இருக்கும்<br> | 5 |
| 45அ | **<u>நிறைவுப்போட்டியின் இயல்புகளை விளக்கவும்?</u>**<br>**நிறைவுப்போட்டி**<br>இது எண்ணற்ற விற்பனையாளர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும் நிறைவுப் போட்டியில் ஒரே விலை நிலவும் . பண்டங்கள் ஒன்றுக்கொன்று பதிலீடாகவும் இருக்கும்<br>**இயல்புகள்**<br>**1. எண்ணற்ற வாங்குவோரும், விற்போரும்.**- இது எண்ணற்ற விற்பனையாளர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும்.<br>**2.ஒரே தன்மையுடைய பண்டங்கள்**--அதாவது ஒரு பண்டம் ஒன்றுக் கொன்று பதிலீட்டுப் பண்டங்களாக உள்ளன.<br>**3.அங்காடி நிலைபற்றி முழுமையாக அறிந்திருத்தல்.**-- வாங்குவோர் கூடுதல் விலை கொடுக்கவோ, விற்போர் குறைந்த விலையை பெற்றுக்கொள்ளவோ மாட்டார்கள்.<br>**4. உட்புகுதலும் வெளியேறுதலும் தடையில்லை.**--இது நீண்டகாலத்தில் மட்டும் ஏற்படக் கூடியதாகும்.<br>**5. உற்பத்திக் காரணிகள் இடம்பெயரும்.**--உற்பத்திக் காரணிகள் அதிக வருமானம் கிடைக்கும் போது ஒரு தொழிற்சாலையில் இருந்து மற்றொரு தொழிற்சாலைக்கு இடம்பெயரும்.<br>**6.போக்குவரத்துச் செலவு இல்லை.**---ஒரே விலை நிலவுவதால் போக்குவரத்துச் செலவு இடம் பெறுவது இல்லை.<br>**7.அரசின்தலையீடு இல்லை/ மந்தனகூட்டுஇன்மை.**--அங்காடி சக்திகள் விலையை தீர்மானிக்கும். வாங்குவோர்க்கும், விற்போருக்கும் இடையே ரகசிய ஒப்பந்தம் இல்லை.<br><br>**( ஏதேனும் ஐந்து விளக்கத்துடன் )** | 5 |

| | | |
|---|---|---|
| 45 ஆ | **காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக.**<br>**மகாத்மா காந்தியடிகள்**<br>காந்தியப் பொருளாதாரம் நன்நறியை அடிப்படையாகக் கொண்டது<br>**1. கிராமக் குடியரசு:** காந்தியடிகள் கிராமங்களில் தான் இந்தியா வாழ்வதாகக் கருதினார். தன்னிறைவு பெற்ற கிராமமாக முன்னேறுவதை அவர் விரும்பினார்<br>**2. இயந்திரங்கள்:** காந்தியடிகள் இயந்திரங்களை'மிகப்பெரிய பாவம்' என்று வர்ணித்தார்.<br>**3. தொழில்மயம்:** நாட்டின் திறனை முழுவதும் சுரண்டுவதை தொழில்மயம் சார்ந்துள்ளது எனக்கருதினார்.<br>**4. உற்பத்தி பரவலாக்கம்**: உற்பத்தி பரவலாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய காந்தி அது வீடுகளிலேயே உற்பத்தி நடைபெற வேண்டுமென்றும் விரும்பினார் .<br>**5. கிராமசர்வோதயா:** "உண்மையான இந்தியா வாழ்வது கிராமங்களில் தான்" என்று சொன்ன காந்தியடிகள் கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும் என்றார்.<br>**6. மக்க ள் தொகை** : காந்தி செயற்கையான குடும்பக் கட்டுபாட்டு முறைகளை எதிர்த்தார் . ஆனாலும், சுயகட்டுப்பாடே மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த சிறந்த வழி என்று கருதினார் .<br>**7. மதுவிலக்கு**: முழுமையான மதுவிலக்கை வலியுறுத்தியவர் கா ந்தியடிகள்.<br>இந்தியா குடிகா ரர்களின் நாடாக இருப்பதை விட ஏழைகளின் நாடாக இருப்பதே மேல்" என்றார்.<br>**( ஏதேனும் ஐந்து விளக்கத்துடன் )** | 5 |
| 46அ | **கீன்சின் வட்டிக் கோட்பாட்டினை விவரி?**<br>**வட்டி:-** "ரொக்கமாக வைத்திருப்பதை தவிர்ப்பதற்காக கொடுக்கப்படும் வெகுமதியே வட்டி " என்று கீன்ஸ் கூறுகிறார்.<br>மூன்று நோக்கங்களுக்காக மக்கள் பணத்தை ரொக்கமாக வைத்திருக்க விரும்புவர். அவை<br>**1. பரிமாற்ற நோக்கம் 2. முன்னெச்சரிக்கை நோக்கம்.--3. ஊகவாணிக நோக்கம்.--**<br>**கீன்சின் வட்டிக் கோட்பாடு.**<br>வட்டி வீதத்தை தீர்மானிப்பதில் ஊகநோக்கம் முக்கியத்துவம் வாய்ந்தது. ஊக நோக்கத்திற்காக வைத்திருக்கும் பணம் வட்டிவீதத்துடன் எதிர்கனிய தொடர்பு உள்ளதுஇதை கீழ்கானும் வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.<br><br><br>**வரைபட விளக்கம்.**<br>1. L-என்பது **பணத்தேவை,** M-என்பது பணஅளிப்பையும் குறிக்கும்<br>2. r-என்பது வட்டிவீதத்தைக் குறிக்கும்.<br>3. L-வளைகோடும், M-வளைகோடும், வெட்டும் புள்ளியில் வட்டிவீதம் r-தீர்மானிக்கப்படுகிறது.<br>4. பணத்தேவை L1க்கு, அதிகரிக்கும்போது அல்லது பணஅளிப்பு M1க்கு, குறையும் பொழுது வட்டிவீதம் r1-ஆக அதிகரிக்கும். | 5 |

| | | |
|---|---|---|
| | திறனாய்வு.<br>1. கீன்சு நீர்மைத் தன்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துளார், என்று மற்ற அறிஞர்கள் குறைகூறுகின்றனர்.<br>2. நீர்மைத்தன்மையற்ற சேமிப்புக்கு கொடுக்கப்படும் விலையே வட்டிவீதம் ஆகும், என்று ஜேக்கப் வைனர் கருதுகிறார். | |
| 46 ஆ | **பொருளியல் துறையில் தகவல் தொழில் நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?**<br>தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (ICT) என்பது தகவல்களைவிரைவாகவும், துல்லியமாகவும் தொகுக்கக்கூடிய ஓர் உள்கட்டமைப்பாகும்.<br>**பொருளியல் துறையில் தகவல் தொழில் நுட்பங்கள்**<br>புள்ளி விவரங்களைதொகுத்தல், ஒழுங்குறஅமைத்தல், கையாளுதல், கணக்கிடுதல் மற்றும் முடிவுகளைகாட்சிப்படுத்துதல் ஆகிய கணித புள்ளியியல் கருத்துகள்பொருளியலுக்கு தேவைப்படுகின்றன.<br><br>அவற்றைதகவல் தொடர்பு தொழில் நுட்பம் (ICT) வேகமாகவும், அதிகமாகவும், துல்லியமாகவும் செய்கிறது. பொதுவாக, SPSS மற்றும் EXCEL தொகுப்புகள்பொருளியல் ஆய்வாளர்களால் பயன்படுத்தப்படுகின்றன.<br>சில குறிப்பிட்ட பணிகளுக்குகென சில மென்பொருள்கள்வடிவமைக்கப்பட்டுள்ளன. WORD PROCESSOR, SPREAD SHEET, WEB BROWSER முதலியன பொருளியல் ஆய்வுகளுக்கு அடிக்கடி உபயோகப்படும் சில மென்பொருள்களாகும். | 5 |
| 47அ |  | 5 |

| | | |
|---|---|---|
| | $X = \Delta_x / \Delta = -44 / -11 = 4$<br>i.e. $X = 4$<br><br>$Y = \Delta_Y / \Delta = 11 / -11 = -1$<br>i.e. $Y = -1$<br><br>$\therefore X = 4, Y = -1$ | |
| 47 ஆ | **பேரளவு தொழிற்சாலைகளை குறித்து சுருக்கமாக விளக்குக**<br>1.இரும்பு எஃகு தொழில்<br>2. சணல் தொழில்<br>3. பருத்தி நெசவுத் தொழில்<br>4. சர்க்கரை தொழில்<br>5. உரத்தொழில்<br>6. காகிதத் தொழில்<br>7. பட்டு தொழில்<br>8. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு<br>**( ஏதேனும் ஐந்து விளக்கத்துடன் )** | 5 |

VGP CHANDRAN
www.Padasalai.Net